# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## September 2, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக முதல்வர் ச.ஜோசப் விஜய் தண்ணீரை திறந்துவிட்டார். தொடர்ந்து, ஆர்ப்பரித்து வெளியேறிய தண்ணீரில் மலர்கள், நெல்மணிகளைத் தூவி வணங்கினார்.
   i. சேலம் மாவட்டம், மேட்டூர் அணை மூலம் 12 காவிரி டெல்டா மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. அணையின் நீர்மட்டம் 90 அடிக்கு மேல் இருந்தால், டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 12-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம். நிகழாண்டு, அணையில் போதிய நீர் இல்லாததால் கடந்த ஜூன் 12- ஆம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை.
   ii. இந்நிலையில், கர்நாடக அணைகளிலிருந்து உபரிநீர் திறக்கப்பட்டதால், தற்போது அணையின் நீர்மட்டம் 90 அடியைத் தாண்டியுள்ளது. இதையடுத்து, அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு செப்டம்பர் 1-ஆம் தேதி தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது.

2. உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான் நாடுகளுக்கு தான் மேற்கொண்ட இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி இந்தியா திரும்பினார்.
   i. இந்தப் பயணத்தில் முதலில் உஸ்பெகிஸ்தானுக்கு சென்ற பிரதமர், அந்த நாட்டின் அதிபர் ஷாவ்கத் மிர்சியோயேவைச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, இரு நாடுகளிடையேயான ராஜீய உறவை வலுப்படுத்தவும், வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் இருதரப்பு ஆண்டு வர்த்தகத்தை 5 பில்லியன் டாலர் (ரூ.47,750 கோடி) அளவுக்கு உயர்த்தவும் இரு நாடுகள் தரப்பில் தீர்மானிக்கப்பட்டது.
   ii. பின்னர், எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்பதற்காக கிர்கிஸ்தானுக்கு சென்ற பிரதமர், பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவு குறித்து ஆலோசனை மேற்கொண்டார். ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், ஈரான் அதிபர் மசூத் பெசஷ்கியான், ஆர்மீனிய பிரதமர் நிகோல் பாஷினியன் உள்ளிட்ட தலைவர்களுடனும் பிரதமர் மோடி ஆலோசனை மேற்கொண்டார்.
   iii. மாநாட்டில் சீன அதிபர் ஷி ஜின்பிங் சந்தித்தபோது பிரதமர் மோடி அவருடன்

கைகுலுக்கி சிறிதுநேரம் பேசினார். ஆனால், தனிப்பட்ட சந்திப்பு ஏதும் நடைபெறவில்லை.

iv. புது தில்லியில் வரும் செப். 12, 13 தேதிகளில் நடைபெறவிருக்கும் பிரிக்ஸ் மாநாட் டில்சீன அதிபர்ஷி ஜின்பிங் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

3. பிராந்தியத்தின் உயிர்நாடியாக விளங்கும் தண்ணீரை ஒருபோதும் ஆயுதமாகவோ அல்லது அச்சுறுத்தும் கருவியாகவோ பயன்படுத்தக் கூடாது' என்று பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் வலியுறுத்தினார்.

i. ஜம்மு-காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, பாகிஸ்தானுடனான சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா நிறுத்திவைத்துள்ளது.

ii. மேலும், இந்த ஒப்பந்தத்தை இந்தியா கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்திய சர்வதேச நடுவர் நீதிமன்றத்தின் சமீபத்திய உத்தரவையும் இந்தியா நிராகரித்துள்ள சூழலில், கிர்கிஸ்தானில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) உச்சிமாநாட்டில் உரையாற்றிய ஷாபாஸ் ஷெரீஃப் இக்கருத்தைத் தெரிவித்தார்.

iii. நடப்பு 2026-27-ஆம் ஆண்டுக்கான எஸ்சிஓ அமைப்பின் தலைமையை பாகிஸ்தான் ஏற்கும் நிலையில், ஐ.டி., ஏ.ஐ. கட்டமைப்பு, எரிசக்தி மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று ஷாபாஸ் ஷெரீஃப் அறிவித்தார்.

4. நாட்டின் மிகப் பெரிய பொதுத் துறைக் காப்பீட்டு நிறுவனமான இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (எல்ஐசி), 70 ஆண்டுகால சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

i. இந்திய ஆயுள் காப்பீட்டுத் துறையில் நிலவிய நம்பகமின்மையைப் போக்க, கடந்த 1956 செப். 1-ஆம் தேதி எல்ஐசி தேசியமயமாக்கப்பட்டது. 245 காப்பீட்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வெறும் ரூ.5 கோடி மூலதனத்துடன் அரசு கட்டுப்பாட்டில் இந்நிறுவனம் உருவாக்கப்பட்டது.

ii. மக்களின் பாதுகாப்பது சேமிப்பைப் மற்றும் அந்தச் சேமிப்பை நாட்டின் கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீடாக மாற்றுவது என்ற இரட்டை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எல்ஐசி தனது சேவையைத்

தொடங்கியது.

iii. தொடக்கத்தில் ரூ.400 கோடி சொத்துகளுடன் செயல்படத் தொடங்கிய இந்நிறுவனம், தற்போது ரூ.57.29 லட்சம் கோடி மதிப்பிலான சொத்துகளை நிர்வகிக்கும் மாபெரும் நிறுவனமாக உருவெடுத்துள்ளது.

5. இந்திய விமானப் படைக்கு முதல் பெண் துணைத் தளபதியாக (மருத்துவம் அல்லாத பிரிவு) சக்தி சர்மா நியமிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

6. சிந்து நதிநீர் ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது தொடர்பாக, நெதர்லாந்தில் உள்ள நிரந்தர மத்தியஸ்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இந்தியா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

i. கடந்த 1960-ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில், கடந்த ஆண்டு ஏப்ரலில் ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் இருப்பதாக கருதிய இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராக ராஜீய மற்றும் பொருளாதார ரீதியாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் ஒரு பகுதியாக சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தத்தை இந்தியா தற்காலிகமாக நிறுத் திவைத்தது. வருங்காலத்தில் சிந்து நதி, அதனுடன் இணைந்துள்ள பிற நதிகளின் மூலம் பாகிஸ்தானுக்கு தண்ணீர் கிடைக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்தியா தெரிவித்தது.

ii. இந்த ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதற்கு எதிராக, நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் உள்ள நிரந்தர மத்தியஸ்த நீதிமன்றத்தை பாகிஸ்தான் அணுகியது.

iii. இந்த விவகாரத்தை விசாரித்த அந்த நீதிமன்றம், 'சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை இந்தியா தற்காலிகமாக நிறுத்தவோ, ரத்து செய்யவோ உள்ள அனைத்து காரணங்களும் ஆராயப்பட்டன. அவற்றில் எந்தவொரு காரணமும் அந்த ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திய இந்தியாவின் முடிவை நியாயப்படுத்தவில்லை. எனவே சிந்து நதிநீர் ஒப்பந்தத்தின் கீழ் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை இந்தியா நிறைவேற்ற வேண்டும். அந்த

ஒப்பந்தத்தை தற்காலிகமாக நிறுத்திய இந்தியாவின் முடிவு செல்லாது' என்று தீர்ப்பளித்தது.

iv. இந்தத் தீர்ப்பை இந்தியா நிராகரித்துள்ளது. இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'தி ஹேகில் உள்ள நிரந்தர மத்தியஸ்த நீதிமன்றத்தை இந்தியா ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட அந்த நீதிமன்றத்தை, சிந்து நதிநீர் ஒப்பந்த விதிமுறைகளை மீறி உலக வங்கி அமைத்தது. எனவே அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை இந்தியா திட்டவட்டமாக நிராகரிக்கிறது.

v. இந்தியாவின் இறையாண்மை சார்ந்த முடிவுகளில் தீர்ப்பளிக்க அந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. சிந்து நதிநீர் ஒப்பந்தம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட நிலை நீடிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

vi. நெதர்லாந்தில் உள்ள நிரந்தர மத்தியஸ்த நீதிமன்றம் பெயரளவில் நீதிமன்றமாக உள்ளபோதிலும், அரசுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு மூலம் சமரசத் தீர்வு காண்பதே அதன் நடைமுறையாகும்.

7. விண்வெளிக் குப்பைகளால் அதிகரித்து வரும் உலகளாவிய நெருக்கடி, சமீபத்திய பேரழிவுத் தாக்கங்கள், மற்றும் சர்வதேச சட்ட மற்றும் தொழில்நுட்ப சீர்திருத்தங்களின் அவசரத் தேவை.

(i) பூமிக்கும் விண்வெளிக்கும் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்

- பூமி ஒரு தாயைப் போலவும், விண்வெளி ஒரு பாதுகாக்கும் தந்தையைப் போலவும் உயிர்களைப் பாதுகாக்கும் அதே வேளையில், மனிதச் செயல்பாடுகள் பூமியைத் திட்டமிட்டு அழித்து வருகின்றன; தற்போது விண்வெளியிலிருந்து விழும் குப்பைகள் மற்றும் கழிவுகளால் பூமி தாக்கப்படுகிறது.
- சுற்றுப்பாதையில் குவியும் குப்பைகளின் பெரும் குவிப்பு, விண்வெளி அதன் இயற்கையான சக்தியையும் திறனையும் இழக்கச் செய்கிறது.
- அறிவியல் ஆய்வுகளில் ஏற்படும் விரைவான அதிகரிப்புகள், சர்வதேச தனியார் நிறுவனங்களின் ஆதிக்கம், தனியார் செயற்கைக்கோள்களின் வணிக விரிவாக்கம், மற்றும் விண்வெளிச் சுற்றுலாவின் எழுச்சி ஆகியவை விண்வெளிக் குப்பைகள் குறித்த உலகளாவிய கவலைகளைக் கடுமையாக அதிகரித்துள்ளன.
- 2025-ஆம் ஆண்டில் மட்டும், 300-க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள்

விண்வெளியில் ஏவப்பட்டன—இது முந்தைய தசாப்தத்தின் ஏவுதல் விகிதங்களை விட நான்கு மடங்கு அதிகமான எண்ணிக்கையாகும், இது கைவிடப்பட்ட பழைய செயற்கைக்கோள்கள் மற்றும் ராக்கெட் பூஸ்டர்கள் தொடர்பான சிக்கலை மேலும் சிக்கலாக்குகிறது.

(ii) விண்வெளிக் குப்பைகளின் அமைப்பு மற்றும் அளவு

- போலந்து விண்வெளி நிறுவனத்தின் விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வுத் தலைவர் மரியுஸ் ஸ்லோனினாவின் கூற்றுப்படி, விண்வெளிக் குப்பைகளில் கைவிடப்பட்ட ராக்கெட் பாகங்கள், செயலிழந்த செயற்கைக்கோள்கள் மற்றும் சிதைந்த விண்கலங்களின் துண்டுகள் ஆகியவை அடங்கும்.
- தற்போது, 10 செ.மீ-க்கும் பெரிய 36,000-க்கும் மேற்பட்ட துண்டுகளும், அவற்றுடன் நூற்றுக்கணக்கான மில்லியன் சிறிய துண்டுகளும் பூமியைச் சுற்றி வருகின்றன. இவற்றின் மொத்த எடை 13,486 டன்கள் ஆகும்.
- தினமும் குப்பைகள் பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழைகின்றன. வாரத்திற்கு ஒருமுறை, 1,000 கிலோ அல்லது அதற்கு மேற்பட்ட எடையுள்ள பாரிய பொருள்கள் பூமிக்குத் திரும்ப விழுகின்றன.
- ஒரு தசாப்தத்திற்கு முன்பு 110 பொருட்கள் மட்டுமே தாழ் புவி சுற்றுப்பாதையில் (LEO) மீண்டும் நுழைந்த நிலையில், 2025-ல் சுமார் 820 பொருட்கள் வளிமண்டலத்தில் மீண்டும் நுழையும் என்று அமெரிக்க விண்வெளிப் படை எச்சரித்துள்ளது.

(iii) கெஸ்லர் நோய்க்குறி மற்றும் மோதல் அபாயங்கள்

- தாழ் புவி சுற்றுப்பாதையில் (LEO) உள்ள சிதறல் துண்டுகள் வினாடிக்கு சுமார் 7 கி.மீ என்ற அதிவேகத்தில் பயணிக்கின்றன.
- இந்த வேகத்தில் ஏற்படும் மோதல்கள் "கெஸ்லர் நோய்க்குறி"யைத் தூண்டுகின்றன. இது ஒரு சங்கிலித் தொடர் விளைவாகும், இதில் மோதல்கள் மேலும் பல துண்டுகளை உருவாக்குகின்றன. இதனால், தாழ் புவி சுற்றுப்பாதையின் அடர்த்தி அதிகரித்து, தொடர்ச்சியான, தடுக்க முடியாத மோதல்கள் நிகழ்கின்றன.
- இது கட்டுப்படுத்தப்படாமல் விடப்பட்டால், இந்த தொடர் நிகழ்வு, எதிர்கால செயற்கைக்கோள்கள் மற்றும் விண்வெளி ஆராய்ச்சிக்காக முக்கியமான சுற்றுப்பாதைகளை முற்றிலும் பயன்படுத்த முடியாததாக ஆக்கிவிடும்.

(iv) நிஜ உலகத் தாக்கம் மற்றும் சமீபத்திய சம்பவங்கள்

- டிசம்பர் மாதம், கென்யாவின் நைரோபிக்குத் தென்கிழக்கே உள்ள முகு

கிராமத்தில், மனிதனை விட உயரமாகவும் குதிரையை விட கனமாகவும் இருந்த ஒரு ராக்கெட்டின் பிரம்மாண்டமான உலோக வளையம் விவசாய நிலத்தில் விழுந்து நொறுங்கியது. இது "உலகத்தின் முடிவு" என்று அஞ்சிய உள்ளூர் மக்களைப் பீதியடையச் செய்தது. 2025-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கென்யா விண்வெளி நிறுவனம் இதை ஒரு தனிப்பட்ட சம்பவம் என்று நிராகரித்தாலும், இதுபோன்ற வீழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்கின்றன என்று நிபுணர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

- ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு குயின்ஸ்லாந்தில் உலோகக் கோளங்கள் கரை ஒதுங்கியதால், பொதுமக்கள் விலகி இருக்குமாறு விண்வெளி நிறுவனம் எச்சரித்தது. பெரும்பாலான ராக்கெட் சிதைவுகள் எரிந்து சாம்பலாகிவிடும் என்றாலும், எரியாத பாகங்கள் பூமிக்கு விழுவது ஒரு பொதுவான நிகழ்வு என்று ஃபிளிண்டர்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆலிஸ் கோர்மன் விளக்கினார்.
- சமீபத்தில் புளோரிடாவில் ஒரு வீட்டின் மீது ISS சிதைவுகள் மோதி நொறுங்கின, போலந்தில் ஸ்பேஸ்எக்ஸ் ராக்கெட் பாகங்கள் விழுந்தன, ஸ்பெயினின் கேனரி தீவுகளுக்கு மேல் செயலிழந்த சீன செயற்கைக்கோள் ஒன்று உடைந்து சிதறியது, மற்றும் பிலிப்பைன்ஸில் விண்வெளி சிதைவுகள் மீட்கப்பட்டன.

(v) சந்திர மோதல் (ஆகஸ்ட் 5, 2025)

- ஜனவரி 2025-ல், ஸ்பேஸ்எக்ஸ் ஃபால்கன் 9 ராக்கெட்டின் இரண்டாம் நிலை, எரிபொருள் இல்லாமல் விண்வெளியில் தனித்து விடப்பட்டது.
- ஒரு வருடத்திற்கும் மேலாக மிதந்த பிறகு, 4 டன் எடையுள்ள அந்த ராக்கெட் நிலை, ஆகஸ்ட் 5, 2025 அன்று, மணிக்கு 8,700 கி.மீ வேகத்தில் சந்திரனின் மேற்பரப்பில் மோதி நொறுங்கியது.
- இந்த மோதல் 18 மீட்டர் அகலமும் 4 மீட்டர் ஆழமும் கொண்ட ஒரு பெரிய பள்ளத்தை உருவாக்கியதுடன், விஞ்ஞானிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஒரு பெரிய தூசுப் புகையையும் கிளப்பியது. நாசாவும் ஒரு தென் கொரிய சந்திர சுற்றுக்கலமும் இந்த மோதல் நடந்த இடத்தை தீவிரமாக ஆய்வு செய்து வருகின்றன.

(vi) எதிர்கால அபாயங்களும் கொள்கை சீர்திருத்தத்தின் தேவையும்

- ஸ்டார்லிங்க் போன்ற பெரிய தனியார் செயற்கைக்கோள் கூட்டமைப்புகளில் (இதில் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் மட்டும் 10,000-க்கும்

மேற்பட்ட செயற்கைக்கோள்களை இயக்குகிறது), ஒரு தசாப்த காலமாக கட்டுப்படுத்தப்படாமல் பூமியை நோக்கி விழும் விண்வெளி குப்பைகளால், உயிரினங்களுக்கும் வணிக விமானப் போக்குவரத்துக்கும் 85% கடுமையான இடையூறு ஏற்படும் அபாயம் உள்ளது என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

- விண்வெளிக் குப்பைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல்கள் சட்டப்பூர்வமாக கட்டுப்படுத்தாதவை மற்றும் காலாவதியானவை. செயற்கைக்கோள்களின் அடர்த்தி மிகக் குறைவாக இருந்த 2007-ஆம் ஆண்டில் அவை உருவாக்கப்பட்டன, மேலும் அவற்றை நவீனமயமாக்க ஐ.நா. மீது தற்போது அழுத்தம் கொடுக்கப்படுகிறது.
- வளிமண்டலத்திற்குள் மீண்டும் நுழையும் நேரத்தைக் கணக்கிடுவதில் ஏற்படும் ஒரு நிமிடப் பிழை கூட, விபத்து நடக்கும் இடத்தை 300 மைல்கள் வரை மாற்றிவிடக்கூடும் என்பதால், குப்பைகள் எங்கு விழும் என்பதைக் கணிப்பது மிகவும் கடினமாக உள்ளது என்று அமெரிக்க விண்வெளி நிறுவனம் குறிப்பிடுகிறது.
- மீண்டும் வளிமண்டலத்திற்குள் நுழையும்போது விண்கலங்கள் முழுமையாக எரிந்து சாம்பலாகிவிடுவதை உறுதிசெய்யும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும்படி கட்டாயப்படுத்தும் கடுமையான விதிமுறைகளை அரசாங்கங்களும் தனியார் நிறுவனங்களும் செயல்படுத்த வேண்டும் என்று விண்வெளி வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.
- சிராக்கூஸ் பல்கலைக்கழகப் பேராசிரியரும் நாசாவின் முன்னாள் நிர்வாகியுமான சீன் ஓ'கீஃப், இதுபோன்ற பேரழிவுகள் நேரடியாக நமக்கே ஏற்படக்கூடும் என்பதை உணரும் கற்பனைத்திறன் மனிதகுலத்திடம் இல்லை என்று எச்சரிக்கிறார். நாம் விண்வெளிக் கழிவுகளைப் பயனுள்ள வளங்களாக மாற்ற வேண்டும், பஞ்சபூதங்களைப் பாதுகாக்க வேண்டும், மேலும் மாசுபடாத பூமியை உருவாக்க வேண்டும்.